ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2234/6 - 2021 ජූනි මස 29 වැනි අඟහරුවාදා - 2021.06.29

*2234/6 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 29 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டம்*

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 194 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம், இதனகத்துப் பின்னருள்ள அட்டவணையின் பகுதி I இல் விதித்துரைக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பவியலையும் மற்றும் இயன்றனவாக்கப்பட்ட சேவைகளையும் இவ் அட்டவணையின் பகுதி II இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு, 2021 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரி (திருத்தம்) சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் (ப) பந்தியின் (ii) ஆம் உப பந்தியின் நோக்கங்களுக்காகப் பரிந்துரைக்கின்றேன். இக்கட்டளை 2020, சனவரி 1 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறுதல் வேண்டும்.

**மஹிந்த ராஜபக்ஷ,**
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு,
2021, யூன் 29.

அட்டவணை

**பகுதி I**

1. எவரேனும் ஒருவர் இலங்கையில் உருவாக்கும் மென்பொருள் சேவைகள்.

2. இலங்கையில் உருவாக்கப்பட்ட எந்தவொரு மென்பொருளுடன் தொடர்புடைய தழுவல், தரமுயர்த்தல், மேம்பாடு, செயல்படுத்தல் மற்றும் ஒத்த சேவைகள்.

1A – PG 5491 – 545 (2021/07)
இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

3. எவரேனும் ஒரு நபருக்கு ஏதேனும் உள்நாட்டு நிறுவனம் ஒன்றினால் வழங்கப்படும் பின்வரும் சேவைகள் :-

(அ) கணினி செய்நிரலாக்கல் சேவைகள் ;
(ஆ) வியாபார தகவல் தொழில்நுட்பப் பிரயோகங்களின் பயன்பாடு ;
(இ) கணினி முறைமை ஒருங்கிணைப்பு ;
(ஈ) வலைத்தள உருவாக்கலுக்கான சேவைகள் ;
(உ) நிகழ்நிலை (Online) தளங்களை உருவாக்குவதற்கான சேவைகள் ;
(ஊ) வலைப்பின்னல் ஒருங்கிணைப்பு ;
(எ) தரவு தேடல் மற்றும் தரவு நிருவாக சேவைகளுக்கான தரவு செயலாக்கம் ;
(ஏ) உள்நாட்டு மேகக் கணிமை (Cloud Services) சேவைகள் ;
(ஐ) செயற்கை நுண்ணறிவு ;
(ஒ) பொருட்களின் இணையம் ; மற்றும்
(ஓ) சைபர் பாதுகாப்பு

4. ஏதேனும் உள்நாட்டு நிறுவனம் ஒன்றினால் அல்லது இலங்கையில் உள்ள ஒருவரால் எவரேனும் நபர் ஒருவருக்கு மின்னணு முறையில் அல்லது கணினி முறைமை அல்லது செல்லிட மின்னணு சாதனங்களைப் பயன்படுத்துவதன் மூலம் பின்வரும் புற அலுவலக சேவைகளை வழங்குதல்-

(அ) தொலைதகவல் தொழில்நுட்பப் பராமரிப்பு ;
(ஆ) தரவு தேடல் ஒருங்கிணைப்பும் பகுப்பாய்வும் ;
(இ) மருத்துவ பரிசோதனைகள் நீங்கலாக சிகிச்சை தரவுத்தள முகாமைத்துவ (Clinical Database Management) சேவைகள் ; மற்றும்
(ஈ) தகவல் தொழில்நுட்பச் சேவை புறவழிச் செய்விப்பு

5. பின்வருவனவற்றுடன் தொடர்புடைய அறிவு மற்றும் உயர் பகுப்பாய்வு மற்றும் தொழில்நுட்பத் திறன்களின் பயன்பாடு தேவையாகவுள்ள பிரதானமாக தகவல் தொழில்நுட்பத்தின் உதவி அல்லது பயன்பாட்டுடன் வழங்கப்படும் அறிவு செயல்முறை புறவழி செய்விப்புச் சேவைகள்-

(அ) புவியியல் தகவல் முறைமை ;
(ஆ) பொறியியல் மற்றும் வடிவமைப்பு சேவைகள் ; மற்றும்
(இ) இயங்குபடம் (Animation) உள்ளடக்க விருத்தி மற்றும் முகாமை.

## பகுதி II

1. 2020, ஏப்பிறல் 01 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில், தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய உள்ளூர் தொழில் நுட்ப ஊழியர்களின் எண்ணிக்கை, பகுதி I இன் விடயம் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள மென்பொருள் மேம்பாட்டில் பயன் படுத்தப்பட்ட அல்லது விடயம் 2 இல் குறிப்பிடப்பட்ட சேவைகளை வழங்கும் அத்தகைய வகையிலான ஊழியர்களின் மொத்த எண்ணிக்கையில் 70% இற்குக் குறைவாக இருத்தல் கூடாது.

2. 2020, ஏப்பிறல் 01 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில், பகுதி I இல் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளைப் பொறுத்தவரை, அத்தகைய பகுதியின் விடயம் 1 இல் அல்லது 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகள் நீங்கலாக, குறைந்தபட்ச "உள்நாட்டுப் பெறுமதி சேர்க்கை" அத்தகைய சேவைகளின் மொத்த வருமானத்தில் 50% இற்குக் குறைவாக இருத்தல் கூடாது.

"உள்நாட்டுப் பெறுமதி சேர்க்கையைக்" கணக்கிடும் நோக்கத்திற்காக, அத்தகைய நபரால் இறக்குமதி செய்யப்பட்ட எந்தவொரு பொருட்களின் செலவு அல்லது உள்நாட்டில் கொள்வனவு செய்யப்பட்ட, ஆனால் அத்தகைய நபர் பயன்படுத்தும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் அல்லது இலங்கைக்கு வெளியே ஒரு நபருக்கு பணம் செலுத்தும் ஏதேனும் சேவைக்கான செலவும் அத்தகைய சேவைகளின் மொத்த வருமானத்திலிருந்து கழிக்கப்படுதல் வேண்டும்.

3. இந்த அறிவித்தல் பயனுக்கு வரும் திகதியில் உள்ளவாறு, ஏற்கனவே உள்ள வியாபாரம் ஒன்றினை வேறாக்குவதன் மூலம் அமைக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட எந்தவொரு வியாபாரமும் தகுதி பெற மாட்டாது.

07-357

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.